பதிவு எண். M 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 19] சென்னை: கார்த்திகை 18 (4—12—71) சனி வெளியூர்: கார்த்திகை 19 (5—12—71) ஞாயிறு [இதழ்: 144

பம்பாய்-கோவா துறைமுகங்கள் மூடப்படுகின்றன

பம்பாய், டிச. 4—

பம்பாய் — கோவா துறைமுகங்களில் இரவு நேரங்களில் கப்பல் போக்குவரத்தைத் தடை செய்து உத்தரவிடப்பட்டிருக்கிறது.

"பம்பாய்த் துறைமுகத்திற்குள் வரும் கப்பல்கள் இரவு நேரங்களில் 65 கிலோ மீட்டர் தூரத்திலேயே நிறுத்த வைக்கப்பட வேண்டும்" என்று, கடற்படை உத்தரவு ஒன்று கூறுகிறது.

பாகிஸ்தான் போர்ப் பிரகடனம்

அறைகூவலை இந்தியா ஏற்றது

'எதிரிக்குப் பாடம் புகட்டத் துணிந்துவிட்டோம்'

ஆழம் தெரியாமல் காலை விடும் யாகியா கானுக்கு எச்சரிக்கை

நாட்டு மக்களுக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தரும் உறுதி

புதுடில்லி, டிச. 4—

இந்தியாமீது போர் நிலை ஒன்றைப் பிரகடனப்படுத்திப் பாகிஸ்தான் அறிவித்திருப்பதாகக் கராச்சியிலிருந்து வெளியான ராய்ட்டர் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதனைத் தெரிவித்து மக்களவையில் பேசுகையில், தலைமையமைச்சர் இந்திரா காந்தி, 'பாகிஸ்தானின் அறைகூவலை இந்தியா துணிவுடன் சமாளிக்க உறுதி கொண்டிருக்கிறது' என்று நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

பாகிஸ்தான் இன்னமும் தமது தவற்றை உணராமல் செயல்பட்டுவருவதில் வருத்தம் தெரிவித்த தலைமையமைச்சர், 'பாகிஸ்தான் சரியான பாடம் பெறப் போகிறது' என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தியாமீது வலுத் தாக்குதல் நடத்திவரும் பாகிஸ்தான் துருப்புக்களை அடக்கும் பொருட்டு வங்க தேசத்துக்குள் இந்தியப் படைகள் நுழைந்துவிட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

டாக்காவிலும் — ஜெஸ்சூர் பகுதியிலும் 7 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

நேற்று போலவே இன்று காலையிலும் பாகிஸ்தான் விமானங்கள், பல இந்திய நகரங்களையும் தாக்க முனைந்துள்ளன.

இம்முயற்சிகளை, வெற்றிகரமாக இந்தியா முறியடித்தது.

பாகிஸ்தானின் வலுத் தாக்குதல் குறித்து, ஐ.நா.-வுக்குத் தெரிவிக்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் புகார் செய்யவோ, ஐ.நா. தலையிடக் கோரவோ இந்தியா விரும்பவில்லை என்று தெரியவருகிறது.

முன்னெச்சரிக்கை ஏற்பாடாகக் கொச்சி துறைமுகத்திலும் இரவு நேரங்களில் கப்பல் போக்குவரத்தைத் தடை செய்து உத்தரவிடப்பட்டிருக்கிறது.

முழு இருட்டடிப்பு

புதுடில்லி, டிச. 4—

வடக்கே டில்லி உட்பட முக்கிய நகர்களிலெல்லாம் இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

மூன்று முக்கிய விமானத் தளங்கள்மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மேற்கண்ட நகர்களில் அபாய அறிவிப்புச் சங்குகள் ஊதப்பட்டன.

வாஷிங்டனிலிருந்து முதலமைச்சர் கலைஞர் செய்தி

'போர்சூழ்நிலையை உறுதியுடன் சமாளிப்போம்'

வாஷிங்டன், நவ. 4—

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்; 3 12 71 அன்று வாஷிங்டனிலிருந்து தாயகத்திற்குப் புறப்படுகையில் அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:—

"தவிர்க்க இயலாத நிலையில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கின்ற போர்ச் சூழ்நிலையை இந்திய மக்கள் நெஞ்சுறுதியோடு சமாளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

"இந்தியாவின் வெற்றிக்குத் தமிழ்நாட்டு மக்கள் கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாவிதத் தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்குமாறு வேண்டுகிறேன்.

"நவ. 5ந் தேதி சென்னை வந்து சேருகிறேன்; விமான நிலையத்தில் என்னை வரவேற்க வருகின்ற நண்பர்கள் யாரும் மாலை முதலியவற்றை அணிவிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"அன்று மாலை கலைவாணர் அரங்கில் நடைபெறுகின்ற வரவேற்புக் கூட்டம், இந்தியாவின் வெற்றிக்கு உறுதி எடுத்துக்கொள்கின்ற கூட்டமாக அமைய வேண்டுமெனவும் கோருகிறேன்."

அண்ணா சமாதியைத் திட்டமிட்டுத் தாக்கினர்

சட்டப் பேரவையில் நாவலர் விளக்கம்

சென்னை, டிச. 4—

நேற்று சென்னைப் பல்கலைக் கழக முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடத்திய கல்லூரி மாணவர்கள்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததாகவும், அதன் விளைவாகப் பல மாணவர்கள் காயமுற்று மருத்துவமனையில் உள்ளதாகவும், இதுபற்றி விவாதிக்கும் பொருட்டு, அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்றும் கோரி, சிண்டிகேட், சுதந்தரா, கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் இன்று சட்டப் பேரவையில் தனித்தனியே ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், நேற்று நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தார்.

மாணவர்கள் அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்து கலைந்து சென்றிருந்தால் அசம்பாவிதம் ஏதும் நடந்திருக்காது என்றும், அவர்களுடைய கோரிக்கைகளை பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் எடுத்துச் சொல்லி, அவற்றை அவரும் ஏற்றுக்கொண்டு, செனட்—சிண்டிகேட் சபைகளின் மறு ஆய்வுக்கு வைப்பதாக உறுதிமொழி கொடுத்திருக்கிறார் என்றும், இந்தக் கோரிக்கைக்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை என்றும், பல்கலைக்கழக செனட்டும் சிண்டிகேட்டுமே இதுபற்றி முடிவு செய்யவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

மாணவர்களில் ஒரு சாரார் வேண்டுமென்றே திட்டமிட்டு வன்செயல்களில் ஈடுபட்டதாகவும், அண்ணா சமாதியில் நுழைந்து விளக்குகளை உடைத்ததாகவும், மாநிலக் கல்லூரியிலிருந்து, பல்கலைக் கழகம் வரையில் உள்ள விளக்குகளை அடித்து நொறுக்கியதாகவும், கட்டடங்களின் கண்ணாடிகளையும் உடைத்ததாகவும், மாநிலக் கல்லூரி மாணவர்கட்கும் — வெளியில் கூடியிருந்த மாணவர்கட்கும் கைகலப்பு ஏற்படும் நிலையில் வன்செயல்களில் ஈடுபட்டதாகவும், போலீசார் எவ்வளவோ அமைதியான முறையில் அவர்களைக் கலைந்துசெல்லுமாறு கேட்டுக்கொண்டும் பயனில்லை; தாக்கப்படுபவர்கட்குப் பாதுகாப்புத் தரும் வகையில் போலீசார் தலையிட்டதாகவும், முதலில் எச்சரிக்கை செய்து கண்ணீர்ப்புகை வீசியும் கலையாததால் பிரம்புப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாகவும் லத்தியால் அடிக்கவில்லை என்றும், மாணவர்கள் கல்வீசியதால் உயர்தரப் போலீசு அதிகாரிகள், உட்பட 12 போலீசாருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் கூறி நாவலர் தம் கையில் வைத்திருந்த சில புகைப்படங்களையும் அவையினருக்குக் காட்டினார்; மாணவர்கள் வன்செயலில் ஈடுபட்டிருந்த காட்சி புகைப்படத்தில் நன்கு தெரிந்தது.

(1-ம் பத்தி பார்க்க)

(2-ம் பத்தி தொடர்ச்சி)

நாவலரின் விளக்கத்துக்குப்பின் பேரவைத் தலைவர், ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுத்தார்.

தலைவர் தமது தீர்ப்பைக் கூறுவதற்கு முன்னரே சிண்டிகேட் காங்கிரசு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்வதாகக் கூறி வெளியேறினர்.

எப்போதும் தலைவர் தீர்ப்புக்குப் பிறகுதான் எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்வது வழக்கம்; இன்று, அதற்கு முன்னரே சிண்டிகேட் கட்சியினர் வெளிநடப்புச் செய்தது குறித்தும் பேரவைத் தலைவர் வியப்புத் தெரிவித்தார்.

'தலைமையமைச்சரின் கரத்தை வலுப்படுத்துவோம்'

தமிழக அரசின் சார்பில் நாவலர் உறுதிமொழி

சென்னை, டிச. 4—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரும் தமிழகக் கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"பாகிஸ்தானின் திடீர் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் விளைவாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிக்கும் பொருட்டு தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், ஒவ்வொரு அரசியல் கட்சியின் ஒத்துழைப்பையும் — ஒவ்வொரு குடிமகனின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளார்கள்; தலைமையமைச்சரின் கரத்தை வலுப்படுத்துவதில் நமது முழு ஒத்துழைப்பும் அளிக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"'திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர்' என்ற முறையில் நாடு காக்கும் பணியில் தி. மு. கழகம் தலைமையமைச்சருக்குத் துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், தங்களுக்குள் இருந்துவரும் வேறுபாடுகளை மறந்து — ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடி முறியடிப்பதற்கு உதவவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

தியாகத்துக்குத் தயார்!

தமிழக ஆளுநர் கே. கே. ஷா உறுதி

சென்னை, டிச. 4—

"தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

'பாகிஸ்தான் அதிபரின் அடாவடிக்கத்தக்க செயலைச் சமாளிக்கத் தங்களாலான தியாகங்களைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்"

என்று தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், குடியரசுத் தலைவருக்கும் — தலைமையமைச்சருக்கும் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் உறுதி கூறியுள்ளார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,
திருவள்ளுவராண்டு 2002 கார்த்திகை 18 (4—12—71) சனி

'வெற்றியுலா'வின் நாயகனே--வருக!

"இடையில் இருப்பது பல ஆயிரம் மைல்கள் எனினும், அது நாட்டுக்கு நாடு உள்ள தூரமே தவிர, இதயத்துக்கும்--இதயத்துக்கும் இடையே உள்ள தொலைவு அல்ல; உங்களையே எண்ணியவாறு இந்தப் பயணத்தை நடத்துவேன்; நீங்கள் எனக்குத் துணை இருப்பீர்கள் என்ற திடசித்தத்துடன் சென்று வருகிறேன்."

கடந்த நவம்பர் எட்டாம் நாள்--தமது அமெரிக்கப் பயணத்தைத் துவக்குமுன்--தமிழக மக்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த செய்தியில் கண்டுள்ள வாசகமே மேலே குறிக்கப்பட்டிருப்பது.

நமது இதயத்தோடு என்றும் ஒன்றியிருக்கின்ற நமது தலைவர் கலைஞர் அவர்கள், இருபத்தேழு நாட்களை அயல்நாட்டில் கழித்துவிட்டு நாளை தாயகம் திரும்புகிறார்.

இடையில் இருபத்தேழு நாட்கள்தான் அவர் நம்மோடு இல்லையென்றாலும், நமக்கு இது நீண்ட நெடுங்காலம்போலவே தோன்றுகிறது; என்றாலும், கலைஞரைப் பற்றிய செய்திகளை – அவர் அமெரிக்காவில் கண்ட காட்சிகளை -- நிகழ்த்திய உரைகளை -- மேற்கொண்ட சந்திப்புகளை நாள்தோறும் ஏடுகளிலே படித்து இன்புற்று வந்தோம். கலைஞர் சொன்னபடி, நாட்டுக்கு நாடுதான் இடைவெளி தெரிந்ததே தவிர, அவருடைய இதயத்துக்கும்--நம் இதயத்துக்கும் இடைவெளி இருந்ததாகவே நமக்குத் தெரியவில்லை.

கலைஞர் அவர்கள் தமிழகத்தில் இருந்தால் என்ன உணர்வுடன் அவரது பேச்சும் செயலும் இருக்குமோ--அதே போலத்தான் அமெரிக்கா சென்றிருந்த நேரத்திலும் அவருடைய அன்றாட நடவடிக்கைகள் இருந்திருக்கின்றன என்பதை ஏடுகள் வாயிலாக அறிந்தோம்.

நாள்தோறும் யாருடனாவது தொலைபேசி மூலம் பேசிவந்த கலைஞர், தமிழ்நாட்டு அரசியல் நிலை -- பொதுவான அன்றாட நிகழ்ச்சிகள் -- கழகத்தின் நடவடிக்கைகள் முதலிய பல்வேறு செய்திகளையும் கேட்டறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினார்; அதேபோல் நாமும், கலைஞரின் உடல்நலனை அறிந்துகொள்வதில் நாள்தோறும் ஆர்வம் காட்டினோம்.

கலைஞர் அவர்களுடைய கண் அமெரிக்காவில் ஒன்றைக் காண்கிறது என்றால் -- அவருடைய காது அங்கு ஒரு புதிய செய்தியைக் கேட்கிறது என்றால், அதனை, தமிழகமே காண்கிறது -- கேட்டறிகிறது' என்றுதான் பொருள்.

கலைஞர் அவர்கள் அழகிய நகரைப் பார்த்தார் -- நீரூற்றைக் கண்டார் -- என்ற செய்தி நமக்குத் தரப்பட்ட நேரத்தில், அவற்றைக் கண்டதும் கலைஞர் உள்ளத்தில் என்ன தோன்றியது என்பதையும் நாம் அறிய முடிந்தது; அமெரிக்காவில் தாம் கண்டது -- கேட்டறிந்தது அனைத்தையும் தமிழகத்திலும் உருவாக்க முடியுமா என்றுதான் அவருடைய சிந்தனை ஓடியிருக்கிறது!

அமெரிக்காவில் பெரும் பெரும் அரசியல் தலைவர்கள் -- அறிஞர் பெருமக்கள் -- ஆராய்ச்சியாளர்கள் உட்பட பலரையும் கலைஞர் சந்தித்துப் பேசியிருக்கிறார்; அவர்களுடன் அரசியல் -- சமுதாய -- பொருளாதாரப் பிரச்சினைகளை விவாதித்துக் கருத்தும் பரிமாற்றங்கள் செய்திருக்கிறார்; அவ்வளவும் நமக்குப் பயன்படத்தான் போகின்றன.

எனவே, அமெரிக்கா சென்று திரும்பும் கலைஞர் அவர்கள், அங்கிருந்து பல செய்திகளையும், புத்தம்புதுக் கருத்துக்களையும் கொண்டுவந்து நமக்குப் படைக்கப்போகிறார்; நாமும் அவற்றைச் சுவைக்கப்போகிறோம்; அவருடைய அமெரிக்கப் பயணத்தால், தமிழ்நாடு பெருமை பெறுவதுடன் பல நற்பயன்களையும் அடையப் போகிறது.

கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு ஐரோப்பிய நாடுகட்குச் சென்றுவந்தார்; இப்போது அமெரிக்காவுக்குச் சென்றுவருகிறார்; அடுத்து இரஷ்யாவுக்கும் அவர் சென்றுவர வேண்டும்; உலக நாடுகள் அனைத்தையும அவர் கண்டு வரவேண்டும்; அதற்குரிய வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை; காலமும் சூழ்நிலையும் இடமளிக்குமானால், கலைஞரின் அடுத்த பயணம் நிச்சயமாக இரஷ்யப் பயணமாகத்தான் இருக்கும் என நம்பலாம்.

கடந்த காலத்தில், எத்தனையோ பேர் அமெரிக்காவுக்கும் -- மற்ற அயல் நாடுகளுக்கும் சென்று வந்திருக்கின்றனர்; ஆனால், பேரறிஞர் அண்ணாவைப்போல் -- டாக்டர் கலைஞரைப்போல் தாயகத்துக்குப் பயன்தரும் வகையில் அத்தகையோரின் சுற்றுலாக்கள் அமைந்தனவா ? -- வெறும் வெற்றுலாக்களாகத்தானே அவைகளெல்லாம் அமைந்தன!

தமிழ் இனத்தின் தனிச் சிறப்பையும், தமிழக அரசியலில் பேரறிஞர் அண்ணா விளைவித்த பெரும் புரட்சியையும் அமெரிக்க மக்கட்குத் தெளிவுபடுத்தி -- இந்தியாவின் நல்லெண்ணத்தை நிலைநாட்டிவிட்டு -- அமெரிக்கர் உள்ளங்களையெல்லாம் கொள்ளைகொண்டு தமது சுற்றுலாவை, 'வெற்றியுலா'வாக ஆக்கித் திரும்பும் தமிழக முதல்வர் -- டாக்டர் கலைஞர் அவர்களை நாட்டு மக்களுடன் சேர்ந்து 'நம் நாடு'ம் வரவேற்று மகிழ்கிறது.

ஒளியின் பரப்பை அதிகரிப்போம்

உலக நாடுகளுடன் முன்னேற முயலுவோம்

குடியானவர்களுக்குத் தலைமையமைச்சர் அறிவுரை

புதுடில்லி, டிச. 4 –

"உலகம் உள்ளளவும் இருளும் ஒளியும் சேர்ந்துதான் இருக்கும்; ஆனால் நமது பணி, ஒளியின் பரப்பை அதிகரிப்பதேயாம்.

"பழைய முறையில் சாகுபடி செய்வதைக் கைவிட்டுப் புதிய முறைகளை நமது விவசாயிகள் கையாளவேண்டும்; இதன் பொருள், 'பழைய முறைகளை ஒரேயடியாக மறந்துவிட வேண்டும்' என்பதில்லை: மாறாக, பயனற்ற பழைய முறைகளைக் கைவிட்டுப் பயனுள்ள புதிய முறைகளைக் கைக்கொள்வோமேயானால் வாழ்வு வளம்பெறும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, புதுடில்லியிலுள்ள வேளாண்மை ஆய்வுக் கழகத்தின் அணுசக்தி ஆய்வுக் கூடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சுதந்தரம் பெறுவதற்குமுன் பல நூற்றாண்டுகட்கு நமது பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது; ஆனால், நமது விஞ்ஞான -- தொழில் நுட்ப உத்திகளின் மூலம் முன்னேறிவருகிறோம்; நமது உள்நாட்டுத் தேவையை ஏறக்குறைய முழுமையாகச் சமாளிக்கும் நிலையை இப்போது எய்தியுள்ளோம்.

"சில இடங்களில் தண்ணீர்ப் பற்றுக்குறையால், விவசாயிகளால் முழுச் சாகுபடியும் செய்ய முடிவதில்லை; இதைச் சமாளிப்பதற்காக நாம் தற்போது புன்செய் சாகுபடியில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம்.

"சிறு அளவில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கும் அரசு உதவி செய்துவருகிறது; ஆய்வுக்கூடங்களில் வேலை செய்வோர் நேரில் வயல்களுக்கும் சென்று விவசாயிகளின் குறைகளை அறிந்து வருவரேயானால், பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

"உணவுத் தானிய உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்பதே மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது; இப்போது நாம் தானியங்களின் தரத்தை உயர்த்துவதில் கவனமாக இருக்கவேண்டும்."

உயிரினும் மேலாக நாட்டை மதிக்கும் வீரர்கள்

இந்தியா—பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் -- முக்கியமாக வங்காள தேச எல்லையில் -- நமது எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர்கள், பதுங்கு குழிகளில் மறைந்திருந்து குண்டுகளை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பதுங்கு குழிகளுக்கு வெளியே காற்றுப் புழக்கம் அதிகமானாலும் மரண பயம் இல்லாமலில்லை.

எல்லோருக்கும் பயம்தான் -- பயமில்லாதவரே இல்லை!

கடந்த சில திங்களில் எவ்விதத் தூண்டுதலுமின்றி நமது வீரர்கள் எல்லைக்கு அப்புறமிருந்து தாக்குதல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

பல இடங்களில் எதிரிகள் நமது எல்லைப் பகுதிக்குள் ஊடுருவி பாதுகாப்பில்லாத நமது கிராமங்களைத் தாக்குகின்றனர்.

இந்த இடங்களில் பயம் இருப்பது நியாயமே; ஏனெனில், எதிரி தன் மக்களையே கொன்று குவித்து அனுபவம் பெற்றவன். அவன் அடுத்தபடியாக, தான் கொல்லவேண்டியவன் எல்லா விதத்திலும் தனது எதிரிதான்— என்று அவன் நினைப்பதால், மேலும் ஈவிரக்கமற்றவன்!

அரண் குழியிலிருந்து நோக்கினால் போர்க்களம் பயங்கரமாக உள்ளது; ஒரு பொந்திலிருக்கும் வீரன், அருகில் சாவை வேண்டிக் தவிக்கும் தன் காயம்பட்ட நண்பனுக்கு உதவவேண்டி அவனைத் தோளில் தூக்கி மற்றொரு தோளில் தன் இலேசு ரக இயந்திரத் துப்பாக்கியுடன் போகிறான்; அவனது உயர் அதிகாரி அவனது முட்டாள்தனமான செய்கைக்குக் கோபித்தால், அவன், கடவுளை நினைக்கிறான்; அவன் கடவுளை நினைப்பது உயிரின் மீதுள்ள ஆசையால் அல்ல; மாறாக, அவன் தனது தாய்நாட்டை அதிகமாக நேசிப்பதால்தான்!

நமது எல்லைப் பாதுகாப்பு வீரரின் புதிய தோற்றம் இதுதான்!

தன் பின்னால் நிற்கும் அகதிப் பெண்ணின் உயிரைக் காக்க அவன் தன் மார்பில் குண்டை ஏற்றுக்கொள்வான்!

'போர்ப் பாதையில் செல்லுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை'

'முழு அளவில் நம்மீது பாகிஸ்தான் போர்தொடுத்திருக்கிறது'

'நீண்டகால சிரமத்துக்கும் தியாகத்திற்கும் நாம் தயாராக இருக்கவேண்டும்'

நாட்டிற்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி முக்கிய அறிவிப்பு

புதுடில்லி, டிச. 4—

"பாகிஸ்தான் நம்மீது முழு அளவில் போர் தொடுத்திருக்கிறது; அமிர்தசரஸ், பத்தான்கோட், ஸ்ரீநகர், அவந்திப்பூர், ஜோத்பூர், உத்தர்லாய், அம்பாலா, ஆக்ரா ஆகிய இடங்களிலுள்ள நம் விமானத் தளங்களைத் திடீரென்று பாகிஸ்தான் விமானப் படை தாக்கியிருக்கிறது.

"வங்க தேசத்தில் நடக்கும் போர், இன்று இந்தியாவுடன் நடத்தப்படும் போராக மாறிவிட்டது.

"நமது நாட்டைப் போர்ப் பாதையில் செலுத்துவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டிருக்கிறது.

"நீண்டகால சிரமங்களுக்கும் – தியாகங்களுக்கும் நாம் தயாராக இருக்கவேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நேற்று நள்ளிரவில் வானொலிமூலம் ஆற்றிய உரையில் நாட்டு மக்களுக்குத் தெளிவுற விளக்கி அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :-

ஆக்கிரமிப்பைச் சந்திக்க வேண்டிய கட்டம் நெருங்கிவிட்டது

"கடந்த மார்ச் திங்களிலிருந்து நம்மீது பெருஞ்சுமை சுமத்தப்பட்டிருக்கிறது; சிரமத்துடன் அதனைத் தாங்கிக்கொண்டிருக்கிறோம்.

வங்க தேசப் பிரச்சினைக்கு அமைதிகரமான தீர்வு காணவேண்டும் என்றும் சனநாயக ரீதியில் வாக்கு அளித்த ஒரே குற்றத்திற்காக மக்கள் ஒழித்துக்கட்டப்பட்டு வருவதைத் தடுக்கவேண்டுமென்றும் உலகை நாம் வற்புறுத்திவந்திருக்கிறோம்.

இப்போது நாம் ஆக்கிரமிப்பைச் சந்திக்க வேண்டிய கட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுவிட்டோம்; நிதானமிழக்காமலும் -- கட்டுப்பாட்டுடனும் -- ஒற்றுமையுடனும் இந்திய மக்கள் அதைச் சமாளிப்பார்கள்.

மக்களின் ஒன்றுபட்ட உறுதியின் துணைகொண்டு, பாகிஸ்தானின் அகாரணமான இந்த ஆக்கிரமிப்பை இறுதியான முறையிலும் -- முழுமையாகவும் முறியடித்தாக வேண்டும்; முறியடிப்போம் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை.

நாம், அமைதியின் ஆர்வமுள்ள மக்கள்; ஆனால் நமது சுதந்தரம்-- சனநாயகம் -- வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பாதுகாக்கவில்லையெனில், சமாதானம் நிலைத்திராது என்பதை நாம் அறிவோம்.

எல்லா அரசியல் கட்சிகளும் அரசுக்குத் தங்குதடையற்ற முழு ஆதரவு அளித்துவருவதாக உறுதி கூறியுள்ளன.

இன்று நாம், நமது நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக மட்டும் போராடவில்லை; எந்த இலட்சியங்கள் இந்த நாட்டுக்கு வலிமையளித்திருக்கின்றனவோ -- எந்த இலட்சியங்களினால் மட்டுமே நம்மை சிறந்த எதிர்காலத்தை நோக்கிய முன்னேற்றப் பாதையில் செலுத்த முடியுமோ --- அந்த இலட்சியங்களுக்காகவும் போரிடுகிறோம்.

நாட்டின் பாதுகாப்புக்காக நமது போர் வீரர்களும்--நமது எல்லா படைகளும் திரட்டப்பட்டுள்ளன; இந்தியா முழுவதிலும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது; அவசியமான ஒவ்வொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது"

பரபரப்பு முக்கியத்துவம் வாய்ந்த இந்த வானொலி உரைக்கு 5 நிமிட நேரம்கூட ஆகவில்லை; முதலில் ஆங்கிலத்திலும் -- பிறகு இந்தியிலும் அவர் பேசினார்.

சரியாக நள்ளிரவு 12 மணிக்கு அவர் பேசுவதாக ஏற்பாடு; ஆனால் 15 நிமிட நேரம் கழித்தே ஒலிபரப்பு துவங்கியது.

யாகியா கான் அவசரச் சட்டம்

ராவல்பிண்டி, டிச. 4—

இந்தியா--பாகிஸ்தான் இடையே தாக்குதல் நடைபெறுவதையொட்டி, பாகிஸ்தான் சர்வாதிகாரி யாகியா கான் நேற்று இரவு ஓர் அவசர சட்டம் பிறப்பித்தார்.

"பாகிஸ்தான் பழைய இராணுவ வீரர்களில் 60 வயதுக்கு குறைந்தவர்கள் அனைவரும் மீண்டும் உடனடியாக இராணுவத்தில் சேரவேண்டும்; இராணுவத்தில் சேரத் தவறுபவர்களுக்குக் கடுமையான சிறைத் தண்டனை விதிக்கப்படும்" என்று அந்த அவசரச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அதிபர் யாகியா கான் போர் வெறி

சொன்னபடி செயலளவில் செய்தேவிட்டார்

இந்தியாவின் மேற்கு எல்லை நகரங்கள்மீது குண்டு வீச்சு— முப்படைத் தளபதிகளின் அவசர ஆலோசனை--பாகிஸ்தான் படைத் தளங்களை தாக்குமாறு உத்தரவு

புதுடில்லி, டிச. 4—

கடந்த 26-ந் தேதியன்று சீனத் தூதுக் குழுவினருக்கு அளித்த விருந்து ஒன்றில் திடீரெனக் கலந்துகொண்ட பாகிஸ்தான் அதிபர் யாகியா கான், 'இன்னும் பத்து நாட்களில் நான் இராவல்பிண்டியில் இருக்க மாட்டேன்; போர்க் களத்தில் இருப்பேன்' என்று அறிவித்திருந்தார்; சொன்னபடி அவர் செய்கையிலும் காட்டிவிட்டார்.

இதுவரையில், இந்தியாவின் கிழக்கு எல்லையில் மட்டுமே இருந்துவந்த மோதுதல் நிலைமையை நேற்று மேற்கு எல்லைக்கும் பரவுமாறு செய்துவிட்டிருக்கிறார்.

இந்தியாவின் மேற்கு எல்லை நகரங்கள்மீது 18 பாகிஸ்தான் விமானங்கள் நேற்று மாலை குண்டுகளை வீசி அப்பட்டமான தாக்குதலைத் தொடங்கிவிட்டன.

இந்த விமானங்களெல்லாம், பெஷாவரிலுள்ள விமானப் படைத் தளத்திலிருந்து தாக்கியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

பாகிஸ்தான் விமானங்களின் தாக்குதல் பற்றிய செய்தி வந்தவுடனேயே இந்தியாவின் முப்படைத் தளபதிகளும், பாதுகாப்புத் துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினர்.

பின்பு, மேற்குப் பகுதி விமானதளத் தளபதி, பாகிஸ்தானின் படைத் தளங்களைத் தாக்கி நாசம் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தார்.

மேற்கு எல்லையின் முன்னணிப் பகுதிகளில் காஷ்மீர், பஞ்சாப், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள ஸ்ரீநகர், அவந்திப்பூர், பத்தான்கோட், அமிர்தசரஸ், பரீத்கோட், உத்தரலாய் விமானத் தளங்கள்மீதும் அம்பாலா -- ஆக்ரா நகர்கள் மீதும் பாகிஸ்தான் சேபர் ஜெட் -- மிரேஜ் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

மேற்கு எல்லையில் முன்னணிப் பகுதிகளில் உள்ள ஸ்ரீநகர், அவந்திப்பூர் (காஷ்மீர்), பத்தான்கோட், அமிர்தசரஸ்விமானத் தளங்களை, பாகிஸ்தான் விமான படையைச் சேர்ந்த 18 விமானங்கள் ஒரே சமயத்தில் தாக்கின.

ஸ்ரீநகர் விமானத் தளத்தை 6 விமானங்கள் தாக்கின; மற்ற மூன்று விமான தளங்கள் ஒவ்வொன்றின்மீதும் 4 பாகிஸ்தான் விமானங்கள் தாக்கின.

இந்தத் தாக்குதல், மாலை 5-40 மணிக்கும்—6-08 மணிக்கும் இடையே நடந்திருக்கிறது.

ஸ்ரீநகர் தாக்குதல் மாலை 5-47 மணிக்கும், பத்தான்கோட் தாக்குதல் 5-45 மணிக்கும், அவந்திப்பூர் தாக்குதல் 6-08 மணிக்கும், அமிர்தசரஸ் தாக்குதல் 5-40 மணிக்கும் நடந்திருக்கிறது.

"இத்தத் தாக்குதல் அனைத்திலுமே இந்திய விமானங்கள் எதிர்த்துப் போட்டியிட்டன" என்று பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஒருவர் கூறினார்; 'இது, இந்தியாவின்மீது தொடுக்கப்பட்ட போர்' என்று அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீநகருக்குத் தெற்கே 40 கிலோமீட்டர் தூரத்தில் அவந்திப்பூர் விமானத் தளம் இருக்கிறது. (8 கிலோமீட்டர்—5-மைல்)

முதல் நடத்தித் திரை அடித்ததன் மூலம் வெற்றி பெற்றது அல்லவா? அதே முறையில், பாகிஸ்தான் விமானங்கள் நேற்று தாக்குதல் நடத்தின; ஆனால், பாகிஸ்தானின் இந்தத் திட்டத்தை ஏற்கனவே இந்தியா அறிந்திருந்ததால் -- முன்கூட்டியே தக்க நடவடிக்கை எடுத்தது; இதனால் பாகிஸ்தான் தாக்குதலில் இந்தியாவுக்கு எந்தவிதச் சேதமும் ஏற்படவில்லை.

புனாவுக்கு அருகில் பாகிஸ்தான் விமானம்

புனா, டிச. 4—

நேற்று நள்ளிரவு 1-30 மணியளவில் புனாவை நோக்கிப் பாகிஸ்தான் விமானங்கள் பறந்துவந்தன; இதனால், புனா நகரில் விமானத் தாக்குதல் அபாயச் சங்கு ஒலித்தது.

டெல்லி--கல்கத்தாமீது பாகிஸ்தான் விமானங்கள்

குண்டு வீசவந்த பாகிஸ்தான் இராணுவ விமானங்கள், நேற்று, டெல்லி நகரத்தின் மீதும் பறந்து சென்றன; இதன் காரணமாக, 6-மணி முதல் 8-மணிவரை டெல்லி விமான நிலையம் மூடப்பட்டது.

இதேபோல், கல்கத்தா மீது பாகிஸ்தான் விமானம் பறந்து சென்றது; ஆகவே, கல்கத்தா விமான நிலையமும் 2 மணி நேரப் மூடப்பட்டது.

விமானங்கள் ரத்து

புதுடில்லி, டிச. 4—

சென்னை -- விமானப் போக்குவரத்தை, நேற்று 'இந்தியன் ஏர் லைன்ஸ்' ரத்து செய்தது.

ஐதராபாத்திலிருந்து நேற்று மாலை டெல்லிக்கும் புறப்பட்ட விமானம், நடு வழியில் திரும்பப்பட்டு -- ஐதராபாத்துக்கே வந்துவிட்டது.

டெல்லிக்குச் செல்லவேண்டிய மேலும் பல விமானங்களும் ரத்து செய்யப்பட்டுவிட்டன.

பாகிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

பஞ்சாபில் ஹல்வாரா என்ற இடத்தில் ஒரு பாகிஸ்தான் விமானமும், அமிர்தசரசில் மற்றொரு பாகிஸ்தான் விமானமும், ஆக்ராவில் மற்றும் ஒரு விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டன.

கீழ்க்கண்ட இடங்களில் பாகிஸ்தான் விமானங்கள் குண்டுகளை வீசியிருக்கின்றன :—

ஸ்ரீநகர்—(காஷ்மீர் தலைநகர்)
அவந்திப்பூர்—(காஷ்மீர்)
அமிருதசரஸ்—(பஞ்சாப்)
பதன்கோட்—(பஞ்சாப்)
பார்மர்—(இராஜஸ்தான்)
அம்பாலா—(பஞ்சாப்)
ஆக்ரா—(டெல்லிக்கு அருகில் உள்ளது; உலகப் புகழ் பெற்ற தாஜ்மகால் இருக்கும் நகரம்)
ஜோத்பூர்—(இராஜஸ்தான்)

ஆக்ரா உள்ளிட்ட சில நகரங்கள்மீது பாகிஸ்தான் விமானங்கள் பல பறந்துவந்து குண்டுகளை வீசியிருக்கின்றன; சேதத்தின் விவரம் சரிவர தெரியவில்லை.

பல நகரங்களில், விமானத் தாக்குதல் அபாய எச்சரிக்கை சங்குகள் அடிக்கடி ஒலித்தன.

பாகிஸ்தான் நினைத்தது என்ன-- நடந்தது என்ன?

முன்பு எகிப்துமீது இஸ்ரேல் விமானங்கள் திடீரெனத் தாக்

இந்தியக் குடியரசின் வரலாற்றில்.....

இரண்டாவது தடவையாக அவசரநிலைப் பிரகடனம்

பாதுகாப்புக்கான அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரங்கள் கிடைக்கின்றன

அடிப்படை உரிமைகளை நிறுத்திவைக்கவும் வகை செய்கிறது

புதுடில்லி, டிச. 4—

ஆத்திரமூட்டும் நிலைமை ஏதும் இல்லாமல் இருந்த நிலையிலேயே நேற்று மாலை இந்தியாவின் முன்னணிப் பகுதிகளிலுள்ள விமானத் தளங்களைப் பாகிஸ்தான் தாக்கியதையடுத்து, நேற்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், அவசரநிலைப் பிரகடனம் செய்தார்.

பிரகடனத்தில், குடியரசுத் தலைவர் இரவு சுமார் 11 மணிக்குக் கையெழுத்திட்டார்; பாகிஸ்தான் விமானங்கள் பல முன்னணி விமானங்களையும், பாகிஸ்தான் தரைப் படைகள் பல எல்லைச் சாவடிகளையும் தாக்கிய பிறகு 5-மணி நேரம் கழித்தே குடியரசுத் தலைவர் அவசரநிலை பிரகடனத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்.

'அவசரநிலை' பிரகடனம் செய்யப்பட்டதன் மூலம், பாதுகாப்புக்குத் தேவையான அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கின்றன; மக்களின் அடிப்படை உரிமைகளை நிறுத்திவைக்கவும் இது வகை செய்கிறது.

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பைக் கருதி அரசியல் சட்டத்தில் 352-வது பிரிவின்கீழ் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்படுவதாக உத்தரவு கூறுகிறது.

இந்தியக் குடியரசின் வரலாற்றிலேயே இரண்டாவது தடவையாக இப்போது அவசரநிலைப் பிரகடனம் செய்யப்படுகிறது.

முதல் தடவையாக 1962 அக்டோபர் 26-ந் தேதியன்று சீன ஆக்கிரமிப்பையடுத்து அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது.

1965-ம் ஆண்டில் பாகிஸ்தான் ஆக்கிரமித்தபோதும், அந்த 'அவசர நிலை'ப் பிரகடனம் நீடித்திருந்தது.

1968 சனவரி 9-ந் தேதி இரவுதான் அவசர நிலை இரத்து ஆயிற்று.

அமைச்சரவை கூட்டம்

நேற்றிரவு தலைமையமைச்சர் அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தார்; முப்படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர்; அவசர நிலைப் பிரகடனத்தைக் குடியரசுத் தலைவர் பிரப்பித்துக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அரசியல் விவகாரக் குழு

அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழு கூடி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆலோசித்த நேரத்துக்கெல்லாம் குடியரசுத் தலைவர், அவசர நிலை பிரகடனத்தைப் பிறப்பித்தார்; இந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர்.

பின்னர், தலைமையமைச்சர், நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர்களை கூட்டிவைத்தும் பேசினார்.

இன்றியமையாப் பொருள்கள்-- கட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிகோலப்படும்

இன்றியமையாப் பொருள்களின் விநியோகம் தொடர்ந்து நீடித்து வருவதற்கு அவசியமான சில நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் கிடைத்தது-- தலைநகருக்கு விரைந்தனர்

பத்தான்கோட், அமிர்தசரஸ், ஸ்ரீநகர் ஆகிய இடங்களைப் பாகிஸ்தான் சேபர் ஜெட் விமானங்கள் தாக்கிய தகவல் கிடைத்தவுடனேயே கல்கத்தாவிலிருந்து தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், பாட்னாவிலிருந்து பாதுகாப்பு அமைச்சர் ஜெ. ஜீவன்ராமும் தலைநகருக்குத் திரும்பினர்.

பின்னர் ஆச்ராவும் அம்பாலாவும் கூடப் பாகிஸ்தான் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகியதாகத் தகவல்கள் வந்தன.

நிதியமைச்சர் சங்கடம்

நிதியமைச்சர் சவாண், பம்பாய் சென்றிருக்கிறார்; பாகிஸ்தான், விமானத் தாக்குதல் நடத்திய செய்தியை அறிந்ததும் அவர் புதுடில்லிக்குத் திரும்ப முனைந்தார்; ஆனால், டில்லிக்குச் செல்லும் இந்தியன் ஏர் லைன்ஸ் விமானங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டதால், அவர், புதுடில்லிக்குத் திரும்ப முடியவில்லை; அமைச்சரவையின் அவசரக் கூட்டத்திலும் கலந்துகொள்ள முடியவில்லை.

குடிசை மாற்று வாரியத்தின் பணிகள்

உலக பாங்கி குழுவினரைக் கவர்ந்தன

சென்னை, டிச. 3—

"தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேற்கொண்டிருக்கும் பணி பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்"

என்று, உலக பாங்கியின் கிழக்காசியப் பிரிவின் துணை இயக்குநர் கிரிகோரி வோட்டா பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரத்தில் இவர் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குடிசை மாற்று வாரியம் மேற்கொண்டிருக்கும் பணிகளைப் பார்வையிட்டார்.

வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் அவர்களுடனும்--ஏனைய அதிகாரிகளுடனும் அவர் விவாதம் நடத்தினார்.

"சமுதாய நீதிக்கும் -- நகர வளர்ச்சிக்கும் ஊக்கம் தர விரும்பும் உலக பாங்கியைச் சேர்ந்த எங்களை, குடிசை மாற்று வாரியப் பணி மிகவும் கவர்ந்துவிட்டது" என்று அவர் தெரிவித்தார்.

பாரசூட் படைகளைப் பாகிஸ்தான் இறக்கியதா?

ஆக்ரா, டிச. 4—

பாகிஸ்தான் விமானங்களிலிருந்து பாரசூட்கள் மூலம் இராணுவ வீரர்கள், ஆக்ராவுக்கு அருகில் இறக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அந்த இடங்களுக்கு இந்திய இராணுவ வீரர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

அமைச்சர் இராசாராம்

பீட்டர்ஸ்சாலைக் குடியிருப்பைப் பார்வையிட்டார்

சென்னை, டிச. 2—

தமிழ்நாடு பிற்பட்டோர் நல வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், இன்று இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையிலுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியைப் பார்வையிட்டார்.

அவரை, குடியிருப்போர் சங்கச் செயலாளர் திரு. செந்தில் மற்றும் நிர்வாகிகள் மாலையணிவித்து வரவேற்றனர்.

இக்குடியிருப்பில் குடியிருக்கும் பத்திரிகையாளர்கள் சார்பில் மா. செங்குட்டுவன், மு. சண்முகம், தேவராசன் ஆகியோர் மாலையணிவித்தனர்.

மற்றும் வீட்டு வசதி வாரிய அதிகாரிகளும் வரவேற்று, குடியிருப்புப் பகுதியைச் சுற்றிக் காண்பித்தனர்.

குடியிருப்போர் சங்கச் சார்பில் சில கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று அமைச்சரிடம் அளிக்கப்பட்டது.

குடியிருப்பில் மேற்கொண்டு செய்யவேண்டிய வசதிகள் பற்றி அமைச்சர் அனைவரிடமும் கேட்டறிந்தார்.

முதலமைச்சர் கலைஞர் வருகை :

கழகத் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் வேண்டுகோள்

தி. மு. கழகத் தலைவர் -- தமிழக முதல்வர் -- கலைஞர் அவர்கள் 5—12—71 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-மணியளவில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்துசேருகிருர்கள்.

தாயகம் திரும்பும் நமது தலைவருக்கு நாம் அளிக்கவிருக்கும் மகத்தான வரவேற்பு சீரும் சிறப்புமாக நடைபெற, வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவிருக்கும் நாடெங்குமுள்ள கழக நிர்வாகிகள் -- தோழர்கள் -- பொதுமக்கள் அனைவரும் அருள்கூர்ந்து விமான நிலையத்தில், காவல்துறையினரால் செய்யப்படும் ஏற்பாடு -- ஒழுங்குமுறை ஆகியவைகளைப் பின்பற்றி, வரவேற்பு வெற்றிகரமாக நடைபெற ஒவ்வொருவரும் தங்களின் ஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விமான நிலையத்தில் விமானத்திற்கு அருகில் முதல் வரிசையில், சட்டமன்ற மேலவைத் தலைவர், பேரவைத் தலைவர், அமைச்சர்கள், சட்டமன்ற மேலவை துணைத் தலைவர்கள், மேயர்கள், துணை மேயர்கள், அரசாங்கக் கொறடாக்கள் ஆகியோரும்--- அடுத்த வரிசையில் மாவட்டச் செயலாளர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

அதற்கு அடுத்து மேடை அருகில் நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்களும், ஏனைய பல்வேறு துறையினரும், அதற்கு அடுத்த வரிசையில் பொதுமக்களும் காவல் துறையினரால் வரிசையாக அமைக்கப்படும் அணிகளில் இருந்து கலைஞர் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளின்படி அனைவரும் ஒத்துழைத்தால், கலைஞர் அவர்களும் களைப்பின்றி அனைவரையும் சந்தித்து -- உங்களின் இதயபூர்வமான வரவேற்பினைப் பெற வசதியாக இருக்கும்.

எனவே, இந்த ஒழுங்கு முறையைத் திட்டவட்டமாகக் கடைப்பிடிக்குமாறு தலைமைக் கழகச் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

3—12—71
சென்னை-13.

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர், தலைமைக் கழகம் தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

உலக வங்கித் தலைவர் -- முதல்வர் கலைஞர் சந்திப்பு

வாஷிங்டன், டிச. 3—

உலக பாங்கித் தலைவர் ராபர்ட் மக்னமாராவை தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இன்று சந்தித்தார்.

குடிசைப் பகுதிகள் சீரமைப்பு -- நகர்ப்புற வளர்ச்சி -- குழந்தைகளுக்குச் சத்துணவு திட்டம் ஆகியவை பற்றிக் கலைஞர் அவர்கள், உலக பாங்கி தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சென்னை நகரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிசைப் பகுதிகள் சீரமைப்புத் திட்டம் பற்றி அவர் எடுத்துச் சொன்னர்.

தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விளக்கினர்.

"குடிநீர் -- வடிகால் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

"சத்துணவுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் சுமார் 2 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது" என்று அவர் சுட்டிக்காட்டினர்.

"நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்குத் தொழில் நுணுக்க உதவியை உலக பாங்கி தரவேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

உலக பாங்கி ஏற்கனவே அனுமதித்துள்ள வேளாண்மைத் திட்டங்களை செயல்படுத்துவது பற்றியும் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

பம்பாய் அருகில் எதிரி விமானம்

பம்பாய், டிச. 4—

நேற்று இரவு 1·40 மணியளவில் பம்பாய் அருகில் எதிரி விமானம் தென்பட்டதைத் தொடர்ந்து அபாயச் சங்குகள் ஒலிக்கப்பட்டன.

ஆனல் இரண்டு -- மூன்று நிமிடங்களுக்குள்ளேயே இந்திய விமானங்கள் அவைகளைத் துரத்திச் சென்று விரட்டியடித்தன.

அடுத்த பத்து நிமிடங்களில், அபாய நிலை நீங்கிய சங்கு ஒலிக்கப்பட்டது.

குசராத்தில் ஒகா துறைமுகத்தை நோக்கியும் பாகிஸ்தான் விமானங்கள் வந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

செஞ் சீனவுக்கு முன்பே தெரியுமா?

புதுடில்லி, டிச. 4—

நேற்று இந்திய விமானத தளங்கள்மீது பாகிஸ்தான் விமானப் படை திடீர் தாக்குதல் நடத்தியது ஏற்கனவே சீனவுக்குத் தெரிந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்திய அதே நேரத்தில், பாகிஸ்தான -- சீன வானொலிகள் இந்தியா, பாகிஸ்தானைத் தாக்கி வருவதாகப் பொய்ச் செய்திகளை வெளியிட்டதை நோக்கர்கள் சுட்டிக்காட்டி, சீனவுக்கு, பாகிஸ்தான் நடத்தும் தாக்குதல் ஏற்கனவே தெரிவித்திருந்ததனலேயே இரு நாடுகளும் ஒருசேரப் பொய்ச் செய்தி வெளியிட்டிருக்க முடியும் என்று கருத்தறிவித்தனா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பணமழையில் நனைந்திடக் கனவிலும் தயங்காதீர்!

கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினல் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம்... எனவே

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு : ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ.	50,000
10 மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ.	50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ.	50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ.	1,00,000

மொத்தப் பரிசுகள் 4264,
மொத்தப் பரிசுத் தொகை ரூ. **14,00,000***

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை
ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-12-71

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2

*4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கண்டனக் கூட்டமும்

கலைஞருக்கு வரவேற்பும்

5-12-71 ஞாயிறு இரவு 7 மணிக்கு -- கலைவாணர் அரங்கில்

தலைவர் : நீலநாராயணன் எம்.எல்.சி.

வரவேற்பு பெறுபவர் :

முதல்வர் கலைஞர்

பேசுவோர் :

தந்தை பெரியார் -- அமைச்சர் நாவலர் - புரட்சி நடிகர் எம் ஜி. ஆர்.

சிலம்புச் செல்வர் ம பொ.சி.	ஏ. ஆர். பெருமாள
மால்கம் ஆதிசேசய்யா	மாரிமுத்து எம்.எல்.ஏ.
திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.	ஏ. பி. சி. வீரபாகு எம்.எல்.ஏ.

மற்றும் அமைச்சர்களும், கழக முன்னணியினரும் கலந்துகொள்வர்.

தமிழ் நாட்டு விமான நிலையங்கள்

பாதுகாப்புகள் பலப்படுத்தப்படுகின்றன

தமிழ்நாட்டிலுள்ள விமான நிலையங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்படுகிறது.

சென்னை -- மீனம்பாக்கம், கோவை, மதுரை, திருச்சி, தொட்டபெட்டா (நீலகிரி) ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்கள், 'பாதுகாக்கப்பட்ட இடங்கள்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விமான நிலையங்கள் பற்றிய தகவலை யாருக்கும் அனுப்பக் கூடாது.